I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.1
**M.C.O.P.NO.279/2024**

| | | |
|---|---|---|
| **Name** | : | Thiru.Magudesh Rajendiran |
| **Designation** | : | Deputy Manager |
| **Age** | : | 26 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

விசாரணை தொடங்கிய நேரம் : 01.30 p.m

**முதல் விசாரணை**

நான் 2வது எதிர்மனுதாரர் கம்பனியில் பணி செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கு ஆங்கிலம் நன்றாக எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ. 1 – பாலிசி நகல்( நிபந்தனைகளுடன்)
எ.ம.சா.ஆ. 2 – பார்வை மகசர் மற்றும் வரைபடம்
எ.ம.சா.ஆ. 3–நியமன கடிதம்

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி விபத்து குறித்து போடப்பட்ட TN 23 CU 7069

என்ற வாகனத்தின் மீது தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு ஆர்.சி, ஓட்டுனர் உரிமம், காப்பீடு ஆகியவை நடைமுறையில் இருந்தது என்றால் சரியல்ல, ஓட்டுனர் உரிமம் இல்லை. ஓட்டுனர் உரிமம் இல்லை என்று RTO வட்டார போக்குவரத்து அலுவலர் தான் சொல்ல முடியும் என்றால் சரிதான். மனுதாரரர்கள் காப்பீடு நிறுவனத்திற்கு 3 ம் தரப்பினர்கள் என்றால் சரிதான், ஆனால் அது பாலிசி விதிமுறைக்கு உட்பட்டது.

விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு ஆர்.சி, காப்பீடு ஆகியவை நடைமுறையில் இருப்பதாலும், மனுதாரர் 3 ம் தரப்பினர்கள் என்பதாலும் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 01.20 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.02.13 18:04:41 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.